# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, SIRKALI

## DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**Case No. CC.314/2020**

| Deposition of Name | கலையரசன் | Prosecution | P.W-5, L.W-7 |
|---|---|---|---|
| Father Name | சுப்ரவேலு | Defence | |
| Village | உடையாம்பாளையம் | Taluk | சீர்காழி |
| District | மயிலாடுதுறை | Age | 40/2026 |

**Solemnly affirmed by Tmt.R. Geetha, Grade 3 bench clerk of this Court in accordance with the provisions of Act X of 1873 of the day 09.03.2026.**

**சத்தியபிரமாணம் பெறப்பட்டது. எதிரிகள் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் மேற்படி முகவரியில் வசித்து விவசாய வேலை செய்து வருகிறேன். கடந்த 02.06.2019 ம் தேதி மாலை 5.00 மணியளவில் நானும் என் நண்பர் குமார் என்பவரும் வேலைக்குசென்று வந்து குளித்துக்கொண்டிருந்தோம். அப்போது நான் வீட்டில் இருந்த போது வைத்தீஸ்வரன்கோயில் போலீசார் என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள் கையெழுத்து செய்த பேப்பரில் உள்ள விவரம் எனக்கு தெரியாது நீதிமன்றத்தில் என்னிடத்தில் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள கையெழுத்துகளில் இரண்டாவது கையெழுத்து என்னுடையது அந்த **கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியீடு** செய்யப்படுகிறது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

போலிசாரிடம் நான் கையெழுத்து போட்ட பேப்பரில் என்ன விபரம் எழுதப்பட்டிருந்தது என்பது எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் போலிசார் என்னை எங்கு வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றால் என் வீட்டில் வைத்து மாலை நேரத்தில் கையொப்பம் வாங்கினார்கள். என்னை

போலிசார் விசாரிக்கவும் இல்லை என்னிடம் கையொப்பம் பெறவும் இல்லை நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது.**

**மறு விசாரணை இல்லை.**